DOLPHIN®
Primary Books

டால்பின்

# நவீன தமிழ் மலர்



வகுப்பு 4

# 5. அன்பு செல்வம் வெற்றி

## கதை





எங்கள் மூவரில் ஒருவர்
உங்கள் வீட்டிற்கு வருவோம்.
உங்களுக்கு யார் வேண்டும்?






நாம் வெற்றியை
அழைப்போம்.
அனைத்திலும்
வெற்றி பெறுவோம்.



இல்லை அப்பா,
செல்வத்தை அழைப்போம்,
அதை வைத்து என்ன
வேண்டுமோ,
வாங்கிவிடலாம்.





வேண்டாம்,
நம்முடைய வீட்டிற்கு
அன்புதான் அவசியம்.
அன்பையே
அழையுங்கள்.





# 10. தெரிந்து கொள்வோம்

## புகழ் பெற்ற ஆசிரியர் மாணவர் பெயர்கள்

| | ஆசிரியர் பெயர்கள் | | மாணவர் பெயர்கள் |
|---|---|---|---|
|  | அகத்தியர் |  | தொல்காப்பியர் |
|  | புத்தர் |  | ஆனந்தர் |
|  | சாக்ரடீஸ் |  | பிளேட்டோ |
|  | பிளேட்டோ |  | அரிஸ்டாட்டில் |
|  | அரிஸ்டாட்டில் |  | மாவீரன் அலெக்சாண்டர் |
|  | இராமகிருஷ்ணர் |  | விவேகானந்தர் |
|  | மீனாட்சிசுந்தரனார் |  | உ.வே.சாமிநாதர் |
|  | தேவநேயப் பாவாணர் |  | பெருஞ்சித்ரனார் |
|  | பாரதியார் |  | பாரதிதாசன் (சுப்புரத்தினம்) |
|  | பாரதிதாசன் |  | சுரதா (இராசகோபால்) |

# 14. அ... ஆ... பாட்டு

## பாடல்





அன்புத் தம்பி ஓடிவா!

அன்புத் தங்காய் ஓடிவா!

ஆடி ஓடி விளையாட வா!

இனிய பாடல் பாட வா!

ஈடு உனக்கு இல்லை வா!

உலகம் காண ஓடி வா!

ஊரார் போற்ற வாழ வா!

என்றும் நன்றே தேட வா!

ஏறு போல் நடந்து வா!

ஐந்து விரல் காட்டியே!

ஒன்று இரண்டு சொல்ல வா!

ஓடி ஆடி விளையாட வா!

ஔவை மொழி கூற வா!







இந்த நிகழ்ச்சி உலகையே திடுக்கிட வைத்தது: சுடப்பட்ட சிறுமியின் நிலை என்னாயிற்று தெரியுமா? மருத்துவமனையில் ஐந்து மணிநேரம் போராடி தலையில் இருந்து துப்பாக்கி குண்டை அகற்றினர்.



மருத்துவர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள் தெரியுமா?. உயிர் பிழைக்க 70 சதவீதம் தான் வாய்ப்பு இருக்கிறது என்று கூறினர். ஆனால் என்ன ஆச்சர்யம். தனது மன உறுதியினால் சாம்பலில் உயிர்த்தெழும் என்று சொல்லுவார்களே? அந்த பீனிக்ஸ் பறவையைப்போல உலக அரங்கில் வந்து நின்றாள் அந்த வீரச்சிறுமி.



அவர் யார் என அறிய உனக்கு மிகவும் ஆவலாக உள்ளது அல்லவா?. அவர்தான் 2014 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்ஸா என்பவர்.

இவருடன் இப்பரிசினை நம் இந்தியாவின் கைலாஷ் வித்யார்த்தி என்னும் சமூக சேவகரும் சேர்ந்து பெற்றுக்கொண்டார். உனக்குத் தெரியும்தானே?

# 26. பயிற்சி

## வினாக்களுக்கு விடையளி

1. நம் தமிழ்நாட்டில் பாயும் ஆறுகள் சிலவற்றின் பெயர்களை எழுது?
2. காவிரி ஆறு எங்கு உற்பத்தியாகிறது?
3. காவிரியின் துணை நதிகள் எவை?
4. மேட்டூர் அணை - குறிப்பு வரைக
5. ஆறுகளின் பயன்கள் யாவை?
6. ஆறுகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?
7. தமிழகத்தின் முக்கிய அணைகள் சிலவற்றின் பெயர்களை அறிந்து எழுது?
8. கல்லணை - குறிப்பு வரைக.



காவிரி ஆறு



# 39. திரிகடுகம்



கண்ணகல் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம் - நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி.

- நல்லாதனார்.

## பாடற் பொருள்:

இடம் அகன்ற பூமியை அளந்ததும், யாவராலும் விரும்பப்படுகின்ற சிறப்புடைய குளிர்ச்சியும் நறுமணமும் பொருந்திய மலர்களையுடைய குருந்த மரத்தை முறித்ததும், தன்னருகே வந்த வஞ்சகமான வண்டினை உதைத்ததும் ஆகிய இம் மூன்றும் செய்தவை காயாம்பூவைப் போலும் நிறமுடைய திருமாலின் திருவடிகளே ஆகும்.

## சொற்பொருள்:



| | | |
|---|---|---|
| கண்ணகல் | - | அகன்ற இடமுடைய |
| ஞாலம் | - | பூமி |
| தண்ணறும் | - | குளிர்ச்சியும், நறுமணமும் |
| சகடம் | - | வண்டு |
| பூவண்ணன் | - | திருமால் |
| அடி | - | பாதம், திருவடி |

## ஆசிரியர் குறிப்பு:

இந் நூலை இயற்றியவர் நல்லாதனார் என்பவர் ஆவார். ஆதனார் என்பது இவரது இயற்பெயர். நல் என்பது அடைமொழி. செரு அடுதோள் நல்லாதன் எனப் பாயிரச் செய்யுள் கூறுவதால் இவர் போர்த் திறமையில் வல்லவர் என அறியப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருத்து என்னும் ஊரைச் சார்ந்தவர். காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

## நூல் குறிப்பு:

சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மருந்துப்பொருள்களைக் கொண்டதே திரிகடுகம் ஆகும். இந்த அரிய மருந்து ஒருவரின் உடல்நோயைப் போக்கும். அதுபோல இந்நூலில் வரும் ஒவ்வொரு பாட்டிலும் சொல்லப்படும் மூன்று அறநெறிகளும் மக்களின் அறியாமையாகிய நோயைப் போக்குகின்றன. எனவே திரிகடுகம் எனப் பெயர் வந்தது.

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. காப்புச்செய்யுள் உட்பட 101 வெண்பாக்களைக் கொண்டது. பாடப்பகுதி காப்புச்செய்யுள் ஆகும்.




Designed, Printed & Published By :

**Sekar Publishers**

An ISO 9001:2000 Certified Company

3/1078/2, Meenampatti, Sattur Road, Sivakasi - 626189.

Tamilnadu - India. Tel : +914562 274132

Your usage feed backs are cordially invited.

Do mail us to: sekharuma@hotmail.com & sekarpublishers@gmail.com

ISBN 978-93-83753-48-2

9789383753482